# முதலாவது எழுத்து எது?

★

பழந்தமிழுடன் பரிச்சயமாக்கும் போட்டி!

## என்.ஜெகதீசன்

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# முதலாவது எழுத்து எது?

பழந்தமிழுடன் பரிச்சயம் ஏற்படுத்தும் ஒரு சிறு முயற்சியே இந்தப் போட்டி.

எஸ்.ஜெகதீசன்.

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# முதலாவது எழுத்து எது!

இளவாலை ஜெகதீசன் மின்னூலகத்தின் வெளியீடுகள் அனைத்தும் இலவசம்.
மின் நூல் பிரதிகளை பெற்றுக் கொள்ள விரும்புவோர்
**S.Jegatheesan75@gmail.com** என்ற மின் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**வெளியிட்ட திகதி 14.02..2026.**

இளவாலை ஜெகதீசன் மின்னூலகம்
கனடா

# என்னுரை

## எஸ்.ஜெகதீசன்



*எழுத்தாளர் நூலாசிரியர்*
*வடிவமைப்பாளர் வெளியீட்டாளர்.*

*இப்பொழுது பழந்தமிழ் சொற்களை அறிந்து கொள்ள ஏராளமான வசதிகள் உள்ளன.*

*பழந்தமிழ் சொற்களை பற்றி தெரிந்து கொள்ள புத்தகங்கள் தவிர வேறு வழியில்லாத காலமும் அன்று இருந்தது.*

*அக்காலத்தில் பழந்தமிழ் சொற்களின் முதல் எழுத்தை மறைத்து அதன் பொருளைக் கொண்டு அந்த எழுத்தைக் கண்டுபிடிப்பது ஒரு சவாலான விளையாட்டு!*

*கலையை உறவுக்குள் இழுத்து வரக்கூடிய ஒரே எழுத்து எது?*

*பதில் தெரியுமா?*

*இந்தப் பாணியில்தான் முதன்முதலாக கேள்விகள் அமைந்தன.*

*சகலை என்பதே அதற்குரிய பதில்!*

*அதற்குத் தேவையான முதல் எழுத்து 'ச' என்பதே எமது எதிர்பார்ப்பு.*

*இதே போன்ற ஐம்பது கேள்விகளுடன் முதல் வார நிகழ்ச்சி நிறைவுற கேள்வி களில் உள்ள சில்மிஷமே மனதில் இலயிப்பதாகவும் பதில்கள் புகட்டிய பழந்தமிழ் சொற்கள் இதயத்தில் இணைய வில்லை என்றும் பலர் தெரிவித்தனர்.*

*அதனால் அதன் போக்கை மிக மிக இலகுவானதாக மாற்ற நேரிட்டது!*

✿ *ளமம். முதலாவது எழுத்துடன் இது நெல். இங்கு தேவையான எழுத்து கதிர்காமத்தில் உள்ளது. செல்வச் சந்நிதியில் கிடையாது.*

*இவ்விதமே சகல கேள்விகளும் அமைந்தன.*

*எந்த எழுத்து பொருத்தமானது? எந்த எழுத்து சரியானது? எந்த எழுத்து மேலானது? என ஊகிப்பதில் அல்லது தீர்மானிப்பதில் எவருக்குமே எந்தச்சிரமமும் இருக்கவில்லை!*

*கதிர்காமத்திலிருந்து 'க' என்ற எழுத்தை எடுத்தவர்கள் களமம் என்ற சரியான பதிலுடன் தமது முயற்சியில் மகிழ்ந்தனர்.*

*பழந்தமிழ் சொற்களை வைத்து சுவாரஸ்யமாக விளையாடும் வகையில் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கேள்வியும் சிக்கலில்லாத சிந்தனைத் தூண்டலாக அமைந்ததாக அன்றைய முதியவர்கள் பூரித்தனர்.*

*ஒவ்வொரு கேள்வியிலும் மறைக்கப்பட்ட எழுத்தைச் சேர்த்தவர்கள் தாமே ஒரு*

பழந்தமிழ்ச் சொல்லை உருவாக்கியது போல் புளகிதம் அடைந்தனர்.

சரியான பதிலுக்காக வெற்றி பெற குதிரை மாதிரி ஓடியவர்கள் வெற்றிக்கு பின்பு குதிரையை விட வேகமாக ஓடினர்.

ஒவ்வொரு பதிலையும் பாராயணம் செய்த முதியவர்களையும் அந்த நாளில் எனக்குத் தெரியும்.

மறைந்திருக்கும் அந்த முதல் எழுத்தை கண்டு பிடிப்பதன் மூலம் பழந்தமிழ் சொற்களுடன் பரிச்சயம் ஏற்படுத்தும் எமது நோக்கம் வெற்றி கண்டது.

கனடிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபன த்தில் வாரத்துக்கு ஐம்பது கேள்விகளுடன் ஏழு மாதங்கள் தங்கத்தமிழ் எனும் பெயரில் சங்கத் தமிழுடன் உறவாட வைத்து அபிமானம் பெற்ற இந்தப் போட்டி இங்கு

நூறு கேள்விகளுடன் ஓர் உதாரண ஆவணமாக நூலுருப் பெறுகின்றது.

பழந்தமிழ் சொற்களை அடிப்படையாகக் கொண்டு முதல் எழுத்தை மட்டும் மறைத்து ஊடாடும் விளையாட்டு வடிவில் உள்ளே உள்ள கேள்விகள் உங்களையும் கவரலாம்.

தென்மொழி கூறும் தேன் போன்ற பழந்தமிழ் சொற்களின் புதிரை விடுவிப்பதில் நீங்களும் லயிக்கலாம்!

அப்படியானால் இந்த உலகம் முழுக்க கண்ணுக்குத் தெரியாத சொற்களால் கட்டப்பட்டிருக்கிறது என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்.

எமது தாயகத்தில் சங்க கால சொற்களின் பாவனை அருகிவரும் காலப் பகுதியில் புலம் பெயர் நாடுகளில் வருடக்கணக்கில் முழுக்கமுழுக்க இச் சொற்களாலேயே

போட்டி நிகழ்ச்சிகள் பெருகி வருவது வியக்கவைக்கின்றது!

சங்க இலக்கியத்தில் இருந்து சொற்களைத் தேடுவது தமிழின் தொன்மையையும் சொற் செல்வத்தையும் அறிய சிறந்த வழியாகும்.

திருக்குறள் அகநானூறு புறநானூறு குறுந்தொகை ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பரிபாடல் கலித்தொகை சிலப்பதிகாரம் பரணி போன்ற சங்க நூல்களில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ள பல்லாயிரம் சொற்களில் இங்குள்ள 100 சொற்ககளும் அதற்கான ஒரு தொடக்கப் புள்ளியை வழங்குகிறது என்பது எனது எண்ணம்

அன்று தமிழ் அறிய விரும்பிய முதியவர் களுக்கு விருப்பமாயிருந்த இலகுவான இந்தப் போட்டி இன்று தமிழ் அறிய விரும்பும் இளையவர்களுக்கு மிக விருப்பமாயிருக்கும் என்பது திண்ணம்.

★

# முதலாவது எழுத்து எது?



1. ✿ யம்

முதலாவது எழுத்துடன் வெற்றி நீர் வலி இரும்பு ஆடு குதிரை என்ற கருத்துக்கள் உள்ள சொல். இங்கு தேவையான எழுத்து வருடத்தில் உண்டு. ஆண்டில் இல்லை.

2. ✿ ள்ளாப்பு.

முதலாவது எழுத்துடன் இது வைகறையை குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வெற்றி வாகை சூடினால் வரும். படு தோல்வியை தழுவினால் வராது.

3. ✿ ங்கு.

முதலாவது எழுத்துடன் இது பெருமை. நூலாசிரியரின் ஆரம்பம் தெரிந்தவர்களுக்கு தெரியும்.

4. ✿ லக்கம்.

முதலாவது எழுத்துடன் இதன் பொருள் பிரகாசம். இங்கு தேவையான எழுத்து துருக்கி மொழியில் உண்டு. ஹிந்தி மொழியில் இல்லை.

5. ✿ ன்கனம்.

முதலாவது எழுத்துடன் நன்றாக என்ற அர்த்தம் உள்ளது. நல்லதை மனதில் வைத்து முயன்று பாருங்கள். பதில் வரும் நன்றாக.

6. ✿ ளமம்.

முதலாவது எழுத்துடன் இது நெல். இங்கு தேவையான எழுத்து கதிர்காமத்தில் உள்ளது. செல்வச்சந்நிதியில் கிடையாது.

7. ✿ ய்வதம்.

முதலாவது எழுத்துடன் கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த தமிழர் வருடத்தை இப்படியும் குறிப்பிட்டார் கள் தெவிட்டும் பதில் தரும். ஆனால் திகட்டும் பதில் தராது.

8. ✿ றுதி.

முதலாவது எழுத்துடன் இது வெகுமதி.. பதில் தருவது பெருமை

9. ✿ மம்.

முதலாவது எழுத்துடன் இது நறுமணப் புகை. இங்கு தேவையான எழுத்து மிகவும் தூரமான இடத்தில் இருப்பதால் கிட்டடி எனின் கிஞ்சித்தும் வாய்ப்பில்லை.

10. ✿ டாளர்.

முதலாவது எழுத்துடன் மேன்மை யுள்ளவர்.பெருமைக்குரியவர். இங்கு தேவையான எழுத்துக்காக பதிலைத் தா எனக் கேட்பது சின்னத்தனமா!

11. ✿ ழாய்.

முதலாவது எழுத்துடன் இது துளசி. இங்கு தேவையான எழுத்து கவிஞர் வைரமுத்துவிடம் உண்டு.கவிஞர் கண்ணதாசனிடமோ கவிஞர் வாலியிடமோ இல்லை.

12. ✿ யனம்.

முதலாவது எழுத்துடன் வழி என்ற அர்த்தம் வரும்.இங்கு தேவையான எழுத்து அம்மாவின் அன்பில் இரட்டிப்பாக இருக்கும்.

13. ✿ ருட்சி.

முதலாவது எழுத்துடன் இது அறிவு. தெரியும் என்றோ தெரியாது என்றோ சொல்லத் தேவையான அறிவு.

14. ✿ ளரி

முதலாவது எழுத்துடன் எமக்குப் பரிச்சயமான யாழ் வரும். இங்கு தேவையான எழுத்து பெரிய வியாபாரியிடம் இருக்கும். சிறிய வர்த்தகரிடம் இராது.

15. ✿ ந்து.

முதலாவது எழுத்துடன் காற்று. இங்கு தேவையான எழுத்துக்காக காற்று வந்து தாலாட்டினால் பதிலே வநதுவிடும். கார் மேகம் முத்தமிட்டால் ஓடி ஒளிந்துவிடும்.

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

1.வ.(வயம்)

2.வெ.(வெள்ளாப்பு)

3.நூ.(நூங்கு).

4.து.(துலக்கம்)

5.ந.(நன்கனம்)



6.க.(களமம்)

7.தெ.(தெய்வதம்)

8.பெ.(பெறுதி)

9.தூ.(தூமம்)

10.தா.(தாடாளர்)

11.து. (துளாய்)

12.அ.(அயனம்)

13.தெ.(தெருட்சி)

14.வி.(விளரி)

15.வ. (வந்து)

16. ✿யல் -

இது வானத்திலிருந்து பொழியும் இயற்கையின் கொடை. உயிர்களுக்கு ஆதாரமான இது விவசாயத்திற்கு மிகவும் அவசியம். நான் யார்?

17. ✿வானம் -

காற்றில் பரவும் அலைகள் நான். செவிக்கும் மனதிற்கும் விருந்தளிக்கும் நான் மௌனத்தை உடைத்து வெளிப்படுவேன். நான் யார்?

18. ✿தரன் -

நான் அறிமுகமற்றவன். அந்நியன். நீங்கள் அறியாத ஒரு புதிய முகம் அல்லது இடம் நான். நான் யார்?

19. ✿குளை -
என் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் என் உற்றத் தோழி நான். என் ரகசியங்கள் அனைத்தும் அறிந்தவள். நான் யார்?

20. ✿பிதானம் -
அடையாளத்தை உணர்த்தும் நான் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை அளிப்பேன். நீங்கள் யார் என்று அறிய நான் உதவுவேன். நான் யார்?

21. ✿ணாடு -
கனவுகளின் உலகம் நான் அமைதியும் இன்பமும் நிறைந்த இடம். இவ்வுலகத் துன்பங்கள் அற்ற நித்திய ஆனந்த பூமி நான். நான் யார்?

22. ✿டலை -
நான் ஒரு வகை மரம் ஆனால்
நான் பூக்காமல் காய்க்கும்
அற்புதம். நான் யார்?

23. ✿சாரி -
நான் வலிமையானதும்
கம்பீரமானதுமான பெண் விலங்கு.
நான் காட்டின் அரசிக்கு
இணையானவன். நான் யார்?

24. ✿ம்பல் -
நான் ஒரு நீர்த் தாவரம். அழகிய
மலர்களால் நீர்நிலைகளை
அலங்கரிப்பேன். பகலில் மலர்ந்து
இரவில் குவியும் நான் யார்?

25. ✿ருணிதர் -
சொற்களின் சிற்பி நான் அறிவும் கவித்துவமும் கொண்டவன். நான் யார்?

26. ✿ரவம் -
நான் வெண்மையான மலர். இரவின் குளுமையில் மலர்ந்து குளங்களின் அழகை அதிகரிப்பேன். தாமரைக்கு நேரெதிரானவன் நான். நான் யார்?

27. ✿ழில் -
கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மை நான். இயற்கையிலும் கலையிலும் என்னைக் காணலாம். என்னைக் காண எல்லோரும் விரும்புவர். நான் யார்?

28. ✿ப்பியம் -
நான் ஒரு பெரும் இலக்கியப் படைப்பு. பல கிளைக் கதைகளுடன் நீதிக்கருத்துக்களை உள்ளடக்கிப் பல தலைமுறைகளுக்கு நிலைத்திருப்பேன். நான் யார்?

29. ✿ணம் -
தவறு செய்யும்போது அல்லது பாராட்டும் போது ஏற்படும் உணர்ச்சி நான். என் முகம் சிவக்கும் தலை குனியும். நான் யார்?

30. ✿கறை -
நான் ஒரு நாளின் தொடக்கம். பொழுது புலரும் முன் சூரிய உதயத்தைக் காணும் அமைதியான நேரம். நான் யார்?

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

16.பெ. (பெயல்)

17.து (துவானம்)

18. இ (இதரன்)

19. இ (இகுளை)

20. அ (அபிதானம்

21.சே (சேணாடு)

22. ஆ (ஆடலை)

23. (குஞ்சரி)

24. ஆ (ஆம்பல்)

25. ப (பருணிதர்)

26. கை(கைரவம்)

27. எ (எழில்)

28. கா (காப்பியம்)

29நா.(நாணம்)

30.வை (வைகறை)



31. ய்யிரம்

முதலாவது எழுத்துடன் இது குறிப்பது மில்லியன்.இங்கு தேவை யான எழுத்து மெழுகுவர்த்தியில் உண்டு. சாம்பிராணியில் இல்லை.

32. ள்ளுண்

முதலாவது எழுத்துடன் இது குறிப்பது பில்லியன். இங்கு தேவை யான எழுத்து தொல்காப்பியத்தில் உண்டு.சிலப்பதிகாரத்தில் இல்லை.

33. மலை

முதலாவது எழுத்துடன் இது இலக்குமியை குறிக்கும். இங்கு தேவையான எழுத்து கதாப்பிரசங் கத்தில் உண்டு. சொற்பொழிவில் இல்லை.

34.. ✿ கார்-

முதலாவது எழுத்துடன் இது ஆற்று முகம். இங்கு தேவையான எழுத்து அபுதாபியில் உண்டு. அதன் அயல் நாட்டில் இல்லை.

35. ✿ ஞ்சனம் -

முதலாவது எழுத்துடன் இது நீரோ ட்டத்தைக் குறிக்கும்.இங்கு தேவை யான எழுத்து அமராவதியிடம் உண்டு. அம்பிகாபதியிடம் இல்லை.

36. ✿ ரிவை -

முதலாவது எழுத்துடன் தோலைக் குறிக்கும்.இங்கு தேவையான எழுத்து அதி உத்தமனிடம் உண்டு. படு பயங்கரவாதியிடம் இல்லை.

37. ✿ ற்புதம் -

முதலாவது எழுத்துடன் இது நீர்க் குமிழியைக் குறிக்கும். தேவை யான எழுத்து புத்திசாலியிடம் உண்டு. அறிவாளியிடம் இல்லை.

38. ✿ யில் -

முதலாவது எழுத்துடன் இது தேங்காய்ப் பாதியை குறிக்கும். தேவையான எழுத்து அனேகத்தில் உண்டு. கொஞ்சத்தில் இல்லை.

39. ✿ வடை -

முதலாவது எழுத்துடன் இது தாடை. இங்கு தேவையான எழுத்து தங்கப் பதக்கத்தில் உண்டு. வெள்ளிக் கேடயத்தில் இல்லை.

40. ✿ **மேசன் -**

**முதலாவது எழுத்துடன் இது சிவனை குறிக்கும். இங்கு தேவை யான எழுத்து  உற்சாகத்தில் உண்டு. சோம்பலில் இல்லை.**

41. ✿ **த்தகம்**

**முதலாவது எழுத்துடன் நெற்றியை குறிக்கும். இங்கு தேவையான எழுத்து கதிர்காமத்தில் உண்டு. செல்வச்சந்நிதியில் இல்லை.**

42. ✿ **ஞ்சனம்**

**முதலாவது எழுத்துடன் இது குழம்பைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வெற்றி வேட்கையில் உண்டு. ஆத்திசூடி யில் இல்லை.**

43. ✿ ட்டன்

இது சிறுபிள்ளையைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வெற்றிலை பாக்கு சுண்ணாம்பில் உண்டு. தாம்பூலத்தில் இல்லை.

44. ✿ வாந்தம்

முதலாவது எழுத்துடன் பௌர்ணமி யையும் குறிக்கும். அமாவாசையை யும் குறிக்கும்.தேவையான எழுத்து உல்லாசப்பயணத்தில் உண்டு. பாத யாத்திரையில் இல்லை.

45. ✿ ராயம்

இது கள்ளைக் குறிக்கும். தேவை யான எழுத்து வருமானத்தில் உண்டு. செலவீனத்தில் இல்லை.

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

31. மெ (மெய்யிரம்)
32. தொ (தொள்ளுண்)
33. க (கமலை)
34.. பு (புகார்)
35. ம (மஞ்சனம்)
36. உ (உரிவை)
37. பு (புற்புதம்)
38. க (கயில்)
39. த (தவடை)
40. உ (உமேசன்)
41. ம (மத்தகம்)
42. வெ (வெஞ்சனம்)
43. கு ((குட்டன்)
44. உ (உவாந்தம்)
45. மா (மாராயம்)



46. ✿ ந்தகாசம்

முதலாவது எழுத்துடன் இது புன்னகையை குறிக்கும். இங்கு தேவையான எழுத்து எம்.ஜி.இராமச் சந்திரனிடம் உண்டு. என்.எம்.நம்பியாரிடம் இல்லை.

47. ✿ ரகம்

முதலாவது எழுத்துடன் வண்டைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து சரணாகதியில் உண்டு. அடைக்கலத்தில் இல்லை

48. ✿ லியம்

முதலாவது எழுத்துடன் இது பூவைக் குறிக்கும். இங்கு தேவை யான எழுத்து அந்தமான் தீவில் உண்டு. நிக்கோபார்தீவில் இல்லை.

49. ✿ மித்தம்

முதலாவது எழுத்துடன் இது காரணத்தைக குறிக்கும். இங்கு தேவையான எழுத்து நிரந்தரத்தில் உண்டு. தற்காலிகத்தில் இல்லை.

50. ✿ தலை

முதலாவது எழுத்துடன் குழந்தையை குறிக்கும். தேவை யான எழுத்து மருதனார்மடத்தில் உண்டு.கல்வியங்காட்டில் இல்லை.

51. ✿ பயம்

முதலாவது எழுத்துடன் இது கொடையை குறிக்கும். தேவையான எழுத்து உண்மையில் உண்டு. பொய்மையில் இல்லை.

52. ✿ **விசு**

**முதலாவது எழுத்துடன் இது செருக்கு. இங்கு தேவையான எழுத்து பட்டாக்கத்தியில் உண்டு. மண்வெட்டியில் இல்லை.**

53 ✿ **மிச்சம்**

**முதலாவது எழுத்துடன் இது சந்தேகத்தை குறிக்கும். தேவையாது ஐயப்பனிடம் உண்டு. முருகனிடம் இல்லை.**

54. ✿ **க்கன்**

**முதலாவது எழுத்துடன் இது நாயைக் குறிக்கும். தேவையான எழுத்து கும்பகோணத்தில் உண்டு. கோபாலபுரத்தில் இல்லை.**

55. ✿ **கமுடையான்**

**முதலாவது எழுத்துடன் கணவன். இங்கு தேவையான எழுத்து அம்பாறையில் உண்டு. கல்முனையில் இல்லை**

56. ✿ **தானம்**

**முதலாவது எழுத்துடன் இது திறந்த வெளியைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து மைலாப்பூரில் உண்டு. மாம்பழம் சந்தியில் இல்லை**

57. ✿ **தாளம்**

**முதலாவது எழுத்துடன் இது நரகம். தேவையான எழுத்து பாம்பில் உண்டு. பருந்தில் இல்லை.**

58. ✿ சி

முதலாவது எழுத்துடன் இது சந்திரனைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து சத்தியத்தில் உண்டு.சாட்சியத்தில் இல்லை.

59. ✿ வசம்

முதலாவது எழுத்துடன் இது அடையாளத்தைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து தும்பியில் உண்டு. பூச்சியில் இல்லை.

60. ✿ கனம்

முதலாவது எழுத்துடன் இது ஆகாயம். இங்கு தேவையான எழுத்து கலப்பையில் உண்டு. ஏர்முனையில் இல்லை.

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

46.ம (மந்தகாசம்)

47.ச (சரகம்)

48.மா (மாலியம்)

49.நி (நிமித்தம்)



50.ம (மதலை)

51.உ (.உபயம்)

52.ப (பவிசு)

53.ஐ (ஐமிச்சம்)

54.கு (குக்கன்)

55.அ (அகமுடையான்)

56.மை (மைதானம்)

57.பா (பாதாளம்)

58.ச (சசி)

59.து (துவசம்)

60.க (ககனம்)

61. ✿ யசம்

முதலாவது எழுத்துடன் இது காகத்தைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வாக்குவாதத்தில் உண்டு. வீண்சண்டையில் இல்லை.

62. ✿ ங்கம்

முதலாவது எழுத்துடன் இது வெற்றியை குறிக்கும். இங்கு தேவையான எழுத்து துப்பாக்கியில் உண்டு.சன்னத்தில் இல்லை.

63. ✿ தகம்

முதலாவது எழுத்துடன் இது நாவாய். இங்கு தேவையான எழுத்து உறக்கத்தில் உண்டு.விழிப்பில் இல்லை.

64. ✿ ப்பியம்

முதலாவது எழுத்துடன் இது இரகசியம். இங்கு தேவையான எழுத்து கோகுலத்தில் உண்டு.ஆயர்பாடியில் இல்லை.

65. ✿ ரமம்

முதலாவது எழுத்துடன் இது ஒழுங்கைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து கிராமத்தில் உண்டு. நகரத்தில் இல்லை

66. ✿ டங்கை

முதலாவது எழுத்துடன் இது உள்ளங்கையைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து குத்துமதிப்பில் உண்டு. துல்லியத்தில் இல்லை.

67. ✿ த்திமை

இந்தக்காலக் காதல் மூன்று எழுத்து. அக்காலக் காதல் நான்கு எழுத்து. பதில் தரும் முதலெழுத்து.

68. ✿ ராவாரம்

முதலாவது எழுத்துடன் இது கடல். இங்கு தேவையான எழுத்து அபாரத்தில் உண்டு. மற்றும்படி இல்லை.

69. ✿ டுப்பை

முதலாவது எழுத்துடன் இது பொன்னாங்கண்ணி. இங்கு தேவையான எழுத்து கொக்கில் உண்டு. காகத்தில் இல்லை.

70. ✿ லசாரம்

முதலாவது எழுத்துடன் இது அணில். இங்கு தேவையான எழுத்து அத்திக்காயில் உண்டு. வெள்ளரிப்பிஞ்சில் இல்லை.

71. ✿ ல்லை

முதலாவது எழுத்துடன் இது புறக்கடை அல்லது தோட்டம். இங்கு தேவையான எழுத்து நீர்கொழும்பில் உண்டு. புத்தளத்தில் இல்லை

72. ✿ றுதி

முதலாவது எழுத்துடன் இது மன்னிப்பையும் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து பொங்கலில் உண்டு. தீபாவளியில் இல்லை.

73. ✿ ர்ணம்

முதலாவது எழுத்துடன் இது குங்குமம். இங்கு தேவையான எழுத்து பவளத்தில் உண்டு. மாணிக்கத்தில் இல்லை.

74. ✿ லக்காரம்

முதலாவது எழுத்துடன் இது பொய்யைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வரலாற்றில் உண்டு. சரித்திரத்தில் இல்லை.

75. ✿ காலயம்

முதலாவது எழுத்துடன் இது கோவில். இங்கு தேவையான எழுத்து மட்டக்கிளப்பில் உண்டு. யாழ்ப்பாணத்தில் இல்லை.

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

61.வா (வாயசம்)

62.து (துங்கம்)

63.உ(உதகம்)

64.கோ(கோப்பியம்)



65.கி(கிரமம்)

66.கு(குடங்கை)

67.ப(பத்திமை)

68.பா(பாராவாரம்)

69.கொ(கொடுப்பை)

70.கா(காலசாரம்)

71.கொ(கொல்லை)

72.பொ(பொறுதி)

73.வ(வர்ணம்)

74.வ(வலக்காரம்)

75.ம(மகாலயம்)

76. ✿ கடியம்

முதலாவது எழுத்துடன் இது பரிகாசத்தைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து ஆகமத்தில் உண்டு. வேதத்தில் இல்லை.

77. ✿ லதி

முதலாவது எழுத்துடன் இது மல்லிகை. இங்கு தேவையான எழுத்து மடுமாதாவிடம் உண்டு. அன்னை வேளாங்கன்னியிடம் இல்லை.

78. ✿ ல்பு

முதலாவது எழுத்துடன் இது மேன்மை. இங்கு தேவையான எழுத்து ஆச்சாத்தில் உண்டு. ஆரவாரத்தில் இல்லை.

79. ✿ ருமலர்

முதலாவது எழுத்துடன் இது தாமரையைக் குறிக்கும். தேவை யான எழுத்து திருவிழாவில் உண்டு.பண்டிகையில் இல்லை.

80. ✿ காசி

முதலாவது எழுத்துடன் இது நெற்றி. இங்கு தேவையான எழுத்து வாக்கு நயத்தில் உண்டு. சொல்லம்பில் இல்லை.

81. ✿ ம்பணம்

முதலாவது எழுத்துடன் இது நீர் வழங்கும் குழாயைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து அந்த நாளில் உண்டு.இன்றைய தினத்தில் இல்லை.

82. ✿ னாலயம்

முதலாவது எழுத்துடன் இது கடலைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து ஆன்மீகத்தில் உண்டு. வழிபாட்டில் இல்லை.

83. ✿ ராலம்

முதலாவது எழுத்துடன் இது பூனை. இங்கு தேவையான எழுத்து அபிவிருத்தியில் உண்டு. கிடப்பில் போடுவதில் கிடையாது.

84. ✿ லிதை

முதலாவது எழுத்துடன் இது கிழவியைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்தை திருப்பதி காட்டும். ஸ்ரீரங்கம் காட்டாது.

85. ✿ **கண்டிகம்**

**முதலாவது எழுத்துடன் இது கோழியைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து அவசியத்தில் உண்டு. வீண்விரயத்தில் இல்லை.**

86. ✿ **டுபடை**

**முதலாவது எழுத்துடன் இது ஏவுகணையைக் குறிக்கும். இங்கு தேவையான எழுத்து வசாவிளானில் உண்டு. அச்சுவேலியில் இல்லை.**

87. ✿ **ங்குல்**

**முதலாவது எழுத்துடன் இது இரவு. இங்கு தேவையான எழுத்து நம்பகத்தில் உண்டு. ஐமிச்சத்தில் இல்லை.**

88. ✿ ட்டடி

முதலாவது எழுத்துடன் இது
சமையல் அறை. இங்கு
தேவையான எழுத்து
செடிகொடியில் உண்டு.
விருட்சத்தில் இல்லை.

89. ✿ ரங்கம்

முதலாவது எழுத்துடன் இது கடல்.
இங்கு தேவையான எழுத்து
அந்தரங்கத்தில் உண்டு.
அம்பலத்தில் இல்லை.

90. ✿ ரபை

முதலாவது எழுத்துடன் இது ஒளி.
இங்கு தேவையான எழுத்து
அபிப்பிராயத்தில் உண்டு.
விமர்சனத்தில் இல்லை.

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

76.ஆ(ஆகடியம்)

77. மா(மாலதி)

78.சா(சால்பு)

79. தி(திருமலர்)

80.ந(நகாசி)

81. அ(அம்பணம்)

82. மீ(மீனாலயம்)

83. வி(விராலம்)

84. ப(பலிதை)

85. சி(சிகண்டிகம்)

86. வி(விடுபடை)

87. க(கங்குல்)

88. கொ(கொட்டடி)

89. த(தரங்கம்)

90. பி(பிரபை)



91. ✿ ண்படை

முதலாவது எழுத்துடன் இது உறக்கத்தைக் குறிக்கும். தேவையான எழுத்து திருநாவுக்கரசரிடம் உண்டு. மாணிக்கவாசகரிடம் கூடுதலாக உண்டு.

92. ✿ ன்மனை

முதலாவது எழுத்துடன் இது மகற்பேற்று நிலையம். இங்கு தேவையான எழுத்து ஈரானில் உண்டு. லிபியாவில் இல்லை.

93. ✿ த்தகம்

முதலாவது எழுத்துடன் கல்வி. இங்கு தேவையான எழுத்து கொக்குவில்லில் உண்டு. சுதுமலையில் இல்லை.

94 ✿ லம்

முதலாவது எழுத்துடன் இது உண் கலம். இங்கு தேவையான எழுத்து அந்தாதியில் உண்டு. பரிபாடலில் இல்லை.

95 ✿ டிறு

முதலாவது எழுத்துடன் இது குறும்பையும் குறிக்கும்.. இங்கு தேவையான எழுத்து கதம்பத்தில் உண்டு. பூச்சரத்தில் இல்லை.

96. ✿ ம்மா

முதலாவது எழுத்துடன் இது யானை. இங்கு தேவையான எழுத்து வெற்றி வாகையில் உண்டு. படு தோல்வியில் இல்லை.

97 ✿ ரதம்

முதலாவது எழுத்துடன் இது சத்தியம். இங்கு தேவையான எழுத்து பரவசத்தில் உண்டு. குதுகலத்தில் இல்லை.

98. ✿ ராயம்

முதலாவது எழுத்துடன் இது மகிழ்ச்சி. இங்கு தேவையான எழுத்து அந்த மான் தீவில் உண்டு. நிக்கோபார் தீவில் இல்லை

99. ✿ ரபாவம்

முதலாவது எழுத்துடன் இது புகழைக் குறிக்கும். இங்கு தேவையான சிவத்தம்பியிடம் உண்டு. கைலாசபதியிடம் இல்லை

100. ற்றம்

முதலாவது எழுத்துடன் இது வெற்றி. இங்கு தேவையான எழுத்து உதயதாரகையில் இல்லை விடி வெள்ளியில் உண்டு.

## முதலாவது எழுத்து எது?



## பதில்கள்

91. க(கண்படை)
92. ஈ(ஈன்மனை)
93. வி(வித்தகம்)
94. தா(தாலம்)
95. ப(படிறு)
96. கை(கைம்மா)
97. ச(சரதம்)
98. மா(மாராயம்)
99. பி(பிரபாவம்)
100. வெ(வெற்றம்)

## முதலாவது எழுத்து எது?

# பதில்கள்

1.வ.(வயம்) 2.வெ.(வெள்ளாப்பு) 3.நூ.(நூங்கு). 4.து.(துலக்கம்) 5.ந.(நன்கனம்) 6.க.(களமம்) 7.தெ.(தெய்வதம்) 8.பெ.(பெறுதி) 9.தூ.(தூமம்) 10.தா.(தாடாளர்) 11.து. (துளாய்) 12.அ.(அயனம்) 13.தெ.(தெருட்சி) 14.வி.(விளரி) 15.வ. (வந்து) 16.பெ. (பெயல்) 17.து (துவானம்) 18. இ (இதரன்) 19. இ (இகுளை) 20. அ (அபிதானம் 21.சே (சேணாடு) 22. ஆ (ஆடலை) 23. (குஞ்சரி) 24. ஆ (ஆம்பல்) 25. ப (பருணிதர்) 26. கை(கைரவம்) 27. எ (எழில்) 28. கா (காப்பியம்) 29நா.(நாணம்) 30.வை (வைகறை 31. மெ (மெய்யிரம்) 32. தொ (தொள்ளுண்) 33. க (கமலை) 34.. பு (புகார்)35. ம (மஞ்சனம்) 36. உ (உரிவை) 37. பு (புற்புதம்) 38. க (கயில்) 39. த (தவடை) 40. உ (உமேசன்) 41. ம (மத்தகம்) 42. வெ (வெஞ்சனம்) 43. கு (குட்டன்)44. உ (உவாந்தம்) 45. மா (மாராயம் 46.ம (மந்தகாசம்)47.ச (சரகம்) 48.மா (மாலியம்) 49.நி (நிமித்தம்) 50.ம (மதலை)

# முதலாவது எழுத்து எது?

## பதில்கள்

51.உ (.உபயம்) 52.ப (பவிசு) 53.ஐ (ஐமிச்சம்) 54.கு (குக்கன்) 55.அ (அகமுடையான்) 56.மை (மைதானம்) 57.பா (பாதாளம்) 58.ச (சசி) 59.து (துவசம்) 60.க (ககனம்) 61.வா (வாயசம்) 62.து (துங்கம்) 63.உ(உதகம்) 64.கோ(கோப்பியம்) 65.கி(கிரமம்) 66.கு(குடங்கை) 67.ப(பத்திமை) 68.பா(பாராவாரம்) 69.கொ(கொடுப்பை) 70.கா(காலசாரம்) 71.கொ(கொல்லை) 72.பொ(பொறுதி) 73.வ(வர்ணம்) 74.வ(வலக்காரம்) 75.ம(மகாலயம்) 76.ஆ(ஆகடியம்) 77. மா(மாலதி) 78.சா(சால்பு) 79. தி(திருமலர்)80.ந(நகாசி) 81. அ(அம்பணம்) 82. மீ(மீனாலயம்) 83. வி(விராலம்) 84. ப(பலிதை)85. சி(சிகண்டிகம்)86 வி(விடுபடை)87. க(கங்குல்) 88.கொ(கொட்டடி) 89. த(தரங்கம்) 90. பி(பிரபை) 91. க(கண்படை) 92. ஈ(ஈன்மனை) 93. (வித்தகம்) 94. தா(தாலம்) 95. ப(படிறு) 96. கை(கைம்மா) 97. ச(சரதம்) 98. மா(மாராயம்) 99. பி(பிரபாவம்) 100. வெ(வெற்றம்)

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி
மனப்பழக்கம் -நித்தம்
நடையும் நடைப்பழக்கம்
நட்பும் தயையும்
கொடையும் பிறவிக்
குணம்

ஔவையார்



ஜெ

ஜெ

ஜெ